DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: STC No.424/2026**

Prosecution witness **PW.1 (LW.1)**

| | | | |
|---|---|---|---|
| Name | : Eshwari | Caste | : |
| Husband Name | : Arjun | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : 30 |
| Time | : | | |

**(Accused absent. Petition filed and allowed. Accused counsel present)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **17.06.2026**

**17.06.2026 முதல் விசாரணை** :

1. நான் தற்போது குன்னூர் அரசு லாலி மருத்துவமனை வளைவு பகுதியில் குடியிருந்து பெட்போர்டிலுள்ள நிக்கிலா என்பவரின் பங்களாவில் வேலை செய்து வருகிறேன். இந்த வருடம் மார்ச் மாதம் எதிரி எனது வீட்டிற்கு வந்தார். பெயரை கேட்டதற்கு நித்யா என்று சொன்னார். என்னிடம் என்ன தைரியமாக நேபாளிலிருந்து இந்த ஊருக்கு வந்தீர் என சொன்னார். பின்பு என்னை எனது கன்னத்தில் அடித்துவிட்டு எனது இரண்டு போன்களை எடுத்துச்சென்றுவிட்டார்.

2. வீட்டில் எனது மகள் இருந்தார், அவரையும் அடித்துவிட்டார். எனது சித்தப்பா கடைக்கு எதிரி சென்று என்னை கெட்ட வார்த்தையில் பேசியுள்ளார். அங்கு எனது வீட்டிற்கு அருகில் உள்ளவர்களுக்கு என்னை அசிங்கமாக எதிரி கெட்ட வார்த்தையால் பேசியது தெரிந்துவிட்டது. மேற்படி சம்பவம் இரவு 08.00 மணிக்கு நடந்தது. 23.03.2026 ம் தேதி நான் குன்னூர் நகர் காவல் நிலையத்திற்கு சென்று எதிரி நித்யா மீது புகார் மனு கொடுத்தேன். என்னிடம்

காண்பிக்கப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான் (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** – இல்லை.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.